எம்மாவுஸ் வறுமையையும் வெறுமையையும் களைந்திட உழைக்கும் உலகளாவிய இயக்கம். **ஒவ்வொருவரும் தங்கள் திறமைக்கேற்ப அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படின் இவ்வுலகினையே மாற்றிட இயலுமே.**

(1999 ஆண்டின் உலக மாமன்றத்தின் (ஆர்லியன்ஸ், பிரான்ஸ்) இறுதி பிரகடனத்திலிருந்து சில குறிப்புகள்)



# எம்மாவுஸ் இயக்கத்தின் உலகளாவிய ஆவணம், கொள்கை

(உலகமாமன்றத்தில் (பெர்ன், ஸ்வீட்ஸர்லாந்து )1969ல் ஏற்கப்பட்டது)

பாலஸ்தீனத்திலுள்ள எம்மாவுஸ் என்ற கிராமத்தின் பெயரிலிருந்தே "எம்மாவுஸ்" என்ற நமது இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. அங்கே தான் நடுங்கியவர்கள் நம்பிக்கை பெற்றார்கள், அல்லல் உற்றோர்க்கு நம்பிக்கை உண்டாயிற்று. மதத்தின் பால் நம்பிக்கை உள்ளவர்கள் , அல்லாதவர் அனைவரிடமும் ஒரே மாதிரி நம்பிக்கையூட்டி 'அன்பு' மட்டுமே அனைவரையும் ஒருங்கிணைத்து முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல இயலும் என்பதை எம்மாவுஸ் என்ற பெயருடைய இவ்வியக்கம் உறுதிப்படுத்துகிறது. நவம்பர் 1949இல் எம்மாவுஸ் இயக்கம் உருவான சூழல். அநியாய அக்கிரமங்களுக்கிடையில் இச்சமூகத்தை மாற்ற வேண்டும் என்ற உறுதியுடனும் விழிப்புணர்வுடனும் சமூகப் பொருப்புகளை ஏற்று செயல்பட்ட மனிதர்கள் வாழ்ந்த காலமும் அது. இனிமேலும் வழி தடுமாறும் மனிதர்களாக வாழாமல் மனித சக்திகளை ஒன்று திரட்டி, கூட்டு செயல்பாடுகளுடன், தனி மனிதனின் துயரத்தை மட்டுமின்றி விழிப்புணர்வு சற்றும் இல்லாத சமூதாயத்தையே காப்பாற்ற வேண்டிய பொருப்பு எம்மாவுஸிற்கு ஏற்பட்டது. நீ வாழு, வாழ வை, வாழ விடு, வாழ உதவு என்பதை போன்ற லட்சியங்கள் அடிப்படையில் தாமும் உழைத்து வாழ்ந்து பிறரையும் வாழ வைக்கும் நம்பிக்கை ஊட்டும் இயக்கங்கள் ஆங்காங்கே உருவாக்கப்பட்டன. நண்பர்களையும், தன்னார்வமிக்க இளைஞர்களையும் இணைத்து பொதுத்துறையிலும் தனியார் துறையிலும் தொடர்ந்து உழைத்து முன்னேற திட்டமிடப்பட்டது.

**1. நமது கோட்பாடு:** அனைத்து மனித குலத்திற்கும் பொருந்தும் தனி மனிதன் மற்றும் சமுதாயத்தின் நீடித்த வாழ்க்கைக்கும், உண்மையான அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் உதவுவது நம் கோட்பாடு. "சுய நலம் தவிர்த்து பிறர் நலம் பேண்" "மிகவும் ஒடுக்கப்பட்ட பாமரர்க்கே பணிபுரிவதில் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்."

**2. நமது மனோபாவம்:** நமது கோட்பாடானது மக்களிடையே அமைதி நிலவிடவும் நீதியை நிலை நிறுத்தவும் வழிவகை செய்தல் வேண்டும்.

**3. நமது தலையாய நோக்கம்:** ஒவ்வொரு தனி மனிதனும், சமுதாயமும், தேசமும் பரஸ்பர கருத்து பரிமாற்றத்துடனும் கண்ணியத்துடனும் வாழ்ந்திட சுமுகமான சூழலை உருவாக்க வேண்டும்.

**4. நமது அனுகுமுறை:** ஒவ்வொருவரும் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழ்ந்து தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டு அடுத்தவர்கட்கும் உதவும் வகையில் உருவாக்கப்பட்டு, திடப்படுத்தப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டு செயல்பட்டு வரும் ஒருதிட்டம்.

**5. நமது பிரதான ஆதாரம்:** ஏதேனும் ஒரு குறிக்கோளை மையமாகக் கொண்டு உழைக்க முன்வரும் மனிதவளங்களை சேகரித்து மிகவும் துன்பத்தில் துவளும் மக்களுக்கு அவசர உதவி அளிக்கத்தக்க ஆற்றலை பாதுகாத்து பலப்படுத்துதல்.

**6. கூடுதல் ஆதாரம்:** சவாலை எதிர்கொள்ளத்தக்க விழிப்புணர்வை மேம்படுத்தி மிகவும் அவதிப் படுவோர்க்குப் பணி செய்வதை முதன்மைப் படுத்த வேண்டும். பொது துறையாகட்டும் தனியார் துறை ஆகட்டும் ஒவ்வொருவரின் அவலநிலைக்காண காரணிகள் தகர்த்தெறியப்பட வேண்டும். பரஸ்பர பரிமாற்றமும் துன்பத்தில் பங்கு கொள்ளும் பக்குவமும் வளர்க்கப் பெற வேண்டும்.

**7. நம் சுதந்திரம்:** இலட்சியங்களை வென்றெடுப்பதில் எம்மாவுஸ் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டதற்கு நீங்கலான வேறெந்த கருத்து வேற்றுமைக்கும் உட்பட்டதன்று எம்மாவுஸ் இயக்கம், எம்மாவுஸ் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டதற்கு அப்பாற்பட்டு வேறெந்த ஆதிக்கத்திற்கும் உட்பட்டதன்று ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தாரால் ஏற்பளிக்கப்பட்ட மனித உரிமை பிரகடனத்தின் அடிப்படையில் செயல்படுகின்றது எம்மாவுஸ் இயக்கம். அரசியல், சமூகம், பொருளாதாரம், சாதி, மதம், மொழி, பாகுபாடின்றி நாட்டின் ஒவ்வொரு சமுதாயத்தின் நியாயமான கோட்பாடுகளுக்கு உடன்பட்டே செயல்படுகிறது எம்மாவுஸ். எம்மாவுஸ் இயக்கத்தில் தங்களை ஒருங்கிணைத்துக் கொண்டு பணியாற்ற விரும்புவோர்க்கு தேவைப்படுவது எம்மாவுஸ் ஆவணத்தில் வரையறுக்கப்பட்டுள்ள இலட்சியங்களுக்காக பணியாற்றுவதே.

**8. நமது உறுப்பினர்கள்:** எம்மாவுஸ் ஆவணத்தில் எளிமையாகவும் தெளிவாகவும் எம்மாவுஸ் இயக்கம் நிறுவுவதற்கான வழிமுறைகள் அடங்கி உள்ளது. இயக்கத்தில் முழுமையான உறுப்பினராக விரும்புவோர் இயக்கக் கோட்பாடுகட்கு கட்டுப்பட வேண்டும்.

---



## உலகளாவிய எம்மாவுஸ்:

ஏழை எளிய ஆதரவற்றோர் அனைவரும் ஒருங்கிணைந்து ஏழைகளின் துயர் துடைக்க பணியாற்றும் உலகலாவிய ஓர் இயக்கமாகும்.

ஆபிபியர் நமக்கு விட்டுச் சென்ற பெரிய பொக்கிஷம் அவரின் அறிவுரைகளே ஆகும். அவர் அளித்த தெளிவுரைபடி ஏழை எளிய ஒடுக்கப்பட்டவர்களின் நலன் காக்கும் சாதி மத பாகுபாடற்ற பொதுவான இயக்கமாக 1971ல் இருந்து பணியாற்றி வருகிறது. எம்மாவுஸ் இயக்கம் எதற்காக போராடுகிறது.? அடித்தட்டு பாமர மக்கள் தங்கள் வாழ்வாதாரங்கள் மீளப்பெற்று பிறருக்கு உதவ வழிகாட்டல் இந்தியாவிலிருந்து போலந்து வரை (பெரு பெணின் போன்ற 36 நாடுகளில் 300 உறுப்பினர்கள் குழுக்களாக வளர்ந்து வருவதுதான் எம்மாவுஸ் இயக்கம்.ஏழை எளிய சமுதாயத்தில் ஒற்றுமையை வளர்த்து பொருளாதார மேம்பாட்டிற்கு உழைக்கின்றது எம்மாவுஸ் இயக்கம். எம்மாவுஸ் இயக்கத்தின் பல்வேறான செயல்பாடுகள்: - மறுமுறை பயன்படுத்த உகந்த பொருட்களை சேகரித்து மறு சுழற்சி மூலம் பயன்பாட்டிற்கு கொணர்தல். - கைவினைப்பொருட்களை உருவாக்கல். - இயற்கை விவசாயம், தெருவோர குழந்தைகள் இரட்சிப்பு - சிறுகடன் உதவி- வங்கிக் கடன் உதவி உலக நாடுகள் ஒருங்கிணைந்து எம்மாவுஸ் இயக்க உணர்வுகளை பலப்படுத்தி ஒற்றுமையை வளர்த்து வருகின்றது. அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பது மட்டும் தான் தம் நோக்கம் என்று கொள்ளாமல் ஏற்றத்தாழ்வு நிறைந்த சமூக அமைப்பு முறையினால் உருவாகும் கனிசமான அளவில் ஏதார்தமாக காணப்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு சாதனைகள் புரிவதற்கும் மற்றும் அரசியல் ஈடுபாடு உடைய செயல்பாடுகளுக்கே முக்கியத்துவம் அளித்து வருகிறது. எம்மாவுஸ் இயக்கத்தில் கூட்டு செயல்பாட்டின் அடிப்படையில் அமுல்படுத்த வேண்டிய 5 முக்கிய செயல்பாடுகள்: 1. தண்ணீருக்கு உத்திரவாதம் - 2. சுகாதாரம் -நோயற்ற வாழ்வு - 3. சிறுகடன்- வங்கிக்கடன் வசதி - 4. அனைவருக்கும் கல்வி வசதி - 5. நாடுகளிலிருந்து இடம் பெயர்வோர் உரிமை பாதுகாப்ப

எம்மாவுஸ் இயக்கமானது அன்றாட பணியுடன் சமூக விழிப்புணர்வு மற்றும் கூட்டு பொறுப்புணர்ச்சியையும் வலியுறுத்தி வருகிறது. ஒருசிறந்த சமுதாயத்தையும், பொருளாதார அடிப்படை வசதிகளை உருவாக்கவல்ல உலகத்திற்கே ஒரு முன்மாதிரி இயக்கமாக எம்மாவுஸ் செயல்பட்டுவருகின்றது என்பதையே எம்மாவுஸ் இயக்கமானது பறை சாற்றி வருகின்றது.

## வறுமைக்கான காரணிகளை களைந்தெறிதல்:

சமூக நீதிக்காக போராடும் குழுக்களுக்கு உத்வேகத்துடன் தோள் கொடுத்து உதவும் எம்மாவுஸ் இயக்கமானது சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்தவர்கள் நலன்களை காப்பதற்கே அர்ப்பணித்துள்ளது. எம்மாவுஸ் பணியானது அவசரக்கால உதவிகள் அளிப்பது மட்டுமன்றி மக்கள் தங்கள் நியாயமான உரிமைகளை தாங்களே தம் சுய முயற்சியில் வென்றெடுக்க உதவுவதே "நமக்கு நாமே" உதவிக் கரம் நீட்டல். துன்பம் துடைப்பதே நம் கொள்கை. தேசிய அளவிலும் சரி, உலக அளவிலும் சரி அறிந்தோ, அறியாமலோ ஒடுக்கு முறையால் மக்களின் துன்பங்களை அதிகரிக்க செய்யும சக்திகளுக்கு எம்மாவுஸ் எப்போதும் எதிராகவே செயல்படும். ஒவ்வொரு எம்மாவுஸ் இயக்கமும் தங்கள் பகுதிக் கேற்ப இயக்கத்தின் இலட்சியங்களை அடைய சாதக பாதக சூழ்நிலைகள் கண்டறிய வேண்டும். அதன் அடிப்படையில் சமூக கொள்கையினை உருவாக்க வேண்டும்.

1979 ஆம் ஆண்டு உலக மாமன்றத்தில் (ஆர்தன்ஸ், டென்மார்க்) ஒப்புதல் அளிக்கப்பட்ட எம்மாவுஸ் சமூகப் பொறுப்புணர்ச்சியின் நிறை குறைகள் ஆவணத்தின் சில குறிப்புரைகள்.

emmaüs international
emmaus international
emaús internacional